



# வேளாண்மை - உழவர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் : 5

## அறிவிப்புகள்
## 2024 – 2025

# வேளாண்மை–உழவர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் –5

## அறிவிப்புகள்
## 2024–2025


**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**


**வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**




## 1. தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடியை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டம் 18 மாவட்டங்களில் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடிப் பரப்பு, உற்பத்தியை அதிகரித்திட 2024-25ஆம் ஆண்டில் சேலம், திருப்பூர், திண்டுக்கல், பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், கடலூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, விழுப்புரம், நாமக்கல், தருமபுரி, திருச்சி, அரியலூர், மதுரை, தேனி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 18 மாவட்டங்களில் மக்காச்சோள சாகுபடி சிறப்புத் திட்டம் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள், திரவ உயிர் உரங்கள், இயற்கை உரம், நானோ யூரியா ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறாயிரம் ரூபாய் மதிப்பிலான 50 ஆயிரம் தொகுப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 50 ஆயிரம் எக்டரில் மக்காச்சோள சாகுபடி ஊக்குவிக்கப்படும்.



## 2. உயர் தொழில்நுட்ப சாகுபடியை வேளாண் பெருமக்களிடம் ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்கிட 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மானியத்தில் பசுமைக் குடில், நிழல்வலைக் குடில்கள் அமைக்கப்படும்.

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளான பசுமைக் குடில், நிழல் வலைக் குடில்களில் பாதுகாக்கப்பட்ட சூழலில் குடை மிளகாய், வெள்ளரி, தக்காளி, முட்டைக்கோஸ், கார்னேசன், ஜெர்பரா, ரோஜா, ஆர்கிட், ஸ்ட்ராபெர்ரி போன்ற பயிர்களை ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் அதிகரித்து விவசாயிகள் அதிக வருவாய் பெற்றிடும் வகையில் 2024-25ஆம் ஆண்டில் பசுமைக் குடில்கள், நிழல்வலைக் குடில்கள் அமைத்திட விவசாயிகளுக்கு 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.



**3. மழையிலிருந்து வேளாண் விளை பொருட்களைப் பாதுகாத்திட ஐந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்புக் கூடங்கள் அமைக்கப்படும்.**

வேளாண் விளைபொருட்களை மழையினால் ஏற்படும் சேதங்களிலிருந்து வீணாகாமல் பாதுகாத்திட விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர், கடலூர் மாவட்டம் விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருக்கோயிலூர் ஆகிய ஐந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2024-25ஆம் ஆண்டில் தலா 15,000 சதுர அடியில் பாதுகாப்புக் கூடங்கள் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.



## 4. தமிழ்நாட்டில் துவரை உள்ளிட்ட பிற பயறுவகைகளின் பரப்பு விரிவாக்கத்திற்கும் அவைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் துவரை உள்ளிட்ட பிற பயறுவகைகள் சாகுபடியினை மேலும் ஊக்கப்படுத்தி புதிதாக 30,000 ஏக்கரில் பரப்பு விரிவாக்கம் செய்யும் விதமாக சாகுபடிக்குத் தேவையான விதை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக்கலவை போன்ற இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் வாயிலாக பயறுவகைகளின் உற்பத்தித்திறனும் உயரும். இதற்கென 2024-25ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.




5. **மிகச்சன்ன இரக நெற்பயிர் சாகுபடியை விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் வகையில் 2,000 மெட்ரிக் டன் மிகச்சன்ன வகை உயர் விளைச்சல் நெல் இரகங்களின் சான்றுவிதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில், அதிக சந்தை விலை கொண்ட மிகச்சன்ன வகை நெல் இரகங்கள் சாகுபடியினை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட 2024-25ஆம் ஆண்டில் 2,000 மெட்ரிக் டன் மிகச்சன்ன வகை உயர் விளைச்சல் நெல் இரகங்களின் சான்றுவிதைகள் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**6. கோடைகாலத்தில் காய்கறிகள் விலையினைக் கட்டுக்குள் வைக்கும் விதமாக சென்னை மாநகருக்கு காய்கறி அளிக்கக்கூடிய மாவட்டங்களில் நிழல்வலைக் குடில் அமைத்து காய்கறிகள் சாகுபடியினை ஊக்குவித்து காய்கறிகளின் வரத்தினை அதிகரிக்கும் வகையில் நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

கோடைக்காலத்தில் வெப்பநிலை அதிகரிப்பினால் காய்கறி விளைச்சல் வெகுவாகக் குறைந்து விலை ஏற்றம் அடைகிறது. அத்தகைய சூழ்நிலைகளில் சென்னை மாநகருக்கு காய்கறி அளிக்கக்கூடிய செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருப்பத்தூர் போன்ற மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பில் நிழல்வலைக்குடில்கள் அமைத்து பாதுகாக்கப்பட்ட சூழலில் கத்தரி, தக்காளி, குடைமிளகாய், கீரைகள் உள்ளிட்ட காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்வது ஊக்குவிக்கப்படும். இதற்கென 2024-25ஆம் ஆண்டில் நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



7. **தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 25 முன்னணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தேசிய அளவில் சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் பயின்றவர்களைத் தலைமைச் செயல் அலுவலர்களாக நியமித்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வேளாண் வணிக செயல்பாடுகளை மேம்படுத்திட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

வேளாண் விளைபொருட்களை ஒன்று திரட்டி சந்தைப்படுத்துதல், மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல் போன்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் நடவடிக்கைகளுடன், காலத்திற்கேற்ப பிற வணிக நடவடிக்கைகளையும் திறம்பட மேற்கொண்டு வளர்ச்சியடையும் விதமாக, தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 25 முன்னணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தேசிய அளவில் சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் பயின்றவர்களைத் தலைமைச் செயல் அலுவலர்களாக நியமித்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வேளாண் வணிக செயல்பாடுகள் மேம்படுத்தப்படும். இதற்கென மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**8. டெல்டா மாவட்டங்களில் வறட்சிக் காலங்களில் பாசன நீர்த்தேவையினைப் பூர்த்தி செய்திடும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்திட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

டெல்டா மாவட்டங்களில் வறட்சிக்காலங்களில் மக்களின் பொதுவான நீர்த் தேவைக்காகவும், கால்நடைகளின் நீர்த் தேவைக்காகவும், அருகில் உள்ள விளை நிலங்களின் நீர்ப் பாசனத் தேவையினைப் பூர்த்தி செய்திடவும் அங்குள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரி அதன் நீர்ப்பிடிப்புத் திறன் அதிகரிக்கப்படும். இதற்கென 2024-25ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**9. அதிக காய்கனி வரத்துடன் செயல்பட்டுவரும் 20 உழவர் சந்தைகளில் அவற்றின் செயல்பாடுகளை மேலும் அதிகரிக்கும் விதமாக அவற்றின் கட்டமைப்பு வசதிகள் மூன்று கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் உழவர் சந்தைகளில் நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக காய்கனி வரத்து கொண்ட உழவர் சந்தைகளில் 20 உழவர் சந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விவசாயிகள், நுகர்வோர்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகளுடன் உழவர் சந்தைகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு பொலிவூட்டப்படும். இதற்கென 2024-25ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



### 10. திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கிவரும் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா, சென்னையில் உள்ள செம்மொழிப் பூங்கா, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பாலை மரபணுப்பூங்கா ஆகியவற்றின் அடிப்படை வசதிகள் ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

பொதுமக்களுக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் தரும் பூங்காக்களை மேலும் எழிலூட்டும் விதமாக, 2024-25ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டம், கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் நீர் ஆதாரம் ஏற்படுத்துதல், குழந்தைகள் விளையாட்டுத்திடல் அமைத்தல், சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவில் நுண்ணீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பாலை மரபணுப் பூங்காவில் நடைபாதைகள் சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் ஒரு கோடியே இருபத்திரண்டு இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.



## 11. தேசிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த பயிற்சிகள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

விவசாயிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் தானிய வகைகள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி, மதிப்புக்கூட்டி உரிய விலையில் விற்பனை செய்திடவும், அவர்களுக்கு ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திடவும், 2024-25ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு தேசிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மூலம் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த பயிற்சிகள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.



## 12. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அலங்கார மலர்ச்செடிகள், அலங்காரத் தாவரங்களின் நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்கிட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

எழிலூட்டுவதற்கு அதிகம் விரும்பப்படும் ட்ரசீனா, அக்லோனீமா, போன்சாய், க்ரோடன்ஸ், ஃபில்லோடென்ட்ரான் போன்ற அலங்காரத் தாவரங்கள், ஹெலிகோனியா, அரளி, போகெய்ன்வில்லா, அடீனியம், ரோஜா, நந்தியாவட்டை போன்ற பல்வேறு அலங்கார மலர்ச்செடிகள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் 2024-25ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும். இதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



## 13. திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் இயங்கிவரும் காய்கறிகளுக்கான மகத்துவ மையத்தின் கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தபடும்.

காய்கறி சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்பப் பயிற்சிகள், வீரிய இரக காய்கறி நாற்றுகள் விநியோகம், பருவமற்ற காலங்களில் பாதுகாக்கப்பட்ட சூழலில் காய்கறி சாகுபடி போன்ற பல்வேறு தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கிவரும் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் இயங்கி வரும் காய்கறிகளுக்கான மகத்துவ மையத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், 2024-25ஆம் ஆண்டில் தாய்ச்செடி தொகுதி, பசுமைக்குடில், நிழல்வலைக் குடில் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.



## 14. கரும்பில் பயறுவகைப் பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடுவதை ஊக்குவிக்க 10 மாவட்டங்களில் 5 ஏக்கர் அளவில் 400 செயல்விளக்கத் திடல்கள் 72 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

கரும்புப் பயிருக்கு இடையில் உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறுவகைப்பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்வதினால் மண் வளம் பெறுவதுடன், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானமும் கிடைக்கும். இதனை ஊக்குவிக்கும் வகையில் 2024-25ஆம் ஆண்டில், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், அரியலூர் ஆகிய பத்து மாவட்டங்களில், பயறுவகை விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக்கலவைகள், கரும்பிற்கு மண் அணைத்தல் உள்ளிட்ட இனங்களுக்கு ஏக்கருக்கு 3 ஆயிரத்து 600 ரூபாய் மானியமாக 400 செயல்விளக்கத் திடல்கள் அமைத்திட 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**15. இராணிப்பேட்டை மாவட்டம் நவ்லாக் அரசு தென்னை நாற்றுப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் தென்னங் கன்றுகளைப் பாதுகாக்க 50 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.**

இராணிப்பேட்டை மாவட்டம் நவ்லாக் அரசு தென்னை நாற்றுப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் தென்னங்கன்றுகளை கால்நடைகளால் ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாத்திட 2024-25ஆம் ஆண்டில் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்புகள் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**16. பயிர்களைத் தாக்கும் பூச்சி, நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அவைகளை கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்திட பூச்சி, நோய் விழிப்புணர்வு வழிகாட்டி (Pest & Disease Calendar) 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.**

காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பல்வேறு புதிய பூச்சி, நோய்த் தாக்குதலினால் சாகுபடி செய்யப்படும் பயிர்களில் ஏற்படும் மகசூல் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு, பூச்சி, நோய்த் தாக்குதல் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவைகளை கட்டுப்படுத்திட ஏதுவாக 2024-25ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு பூச்சி, நோய் விழிப்புணர்வு வழிகாட்டி (Pest & Disease Calendar) இலவசமாக வழங்கப்படும். இதற்கென 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



17. **ஆழியார்நகரில் உள்ள அரசு தென்னை நாற்றுப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் தென்னங்கன்றுகளைப் பாதுகாக்க 40 இலட்சம் ரூபாய் செலவில் முதற்கட்டமாக பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார்நகரில் இயங்கிவரும் அரசு தென்னை நாற்றுப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் உயர் இரக தென்னங்கன்றுகளை அருகாமையிலுள்ள வனப்பகுதியிலிருந்து வரும் காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்திட 2024-25ஆம் ஆண்டில் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்புகள் 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.



## 18. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகள் 25 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

நடவுச்செடிகள் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச்செய்யும் வகையில், 2024-25ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள விச்சந்தாங்கல், மேல்கதிர்பூர், மேல் ஒட்டிவாக்கம், பிச்சிவாக்கம் ஆகிய நான்கு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பாதுகாப்பு வசதிகள், நீர் ஆதாரம் ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்புகள் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**19. டிராகன் பழத்தின் உற்பத்தி, பரப்பினை அதிகரிக்க கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூர் அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் டிராகன் பழத்திற்கான செயல்விளக்கத்திடல் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்த டிராகன் பழச் சாகுபடித் தொழில்நுட்பங்கள், தரமான நடவுச் செடிகள், மகசூல், நிறம், சுவை, பழங்களின் எடை, சத்துகள் போன்ற அனைத்துத் தகவல்களையும் விவசாயிகள், அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் எளிதில் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில், 2024-25ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூர் அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் டிராகன் பழத்திற்கான செயல்விளக்கத்திடல் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.



**20. பேரிடர் காலங்களில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்களை மாற்றி வடிவமைத்திட 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

வேளாண்மைப் பொறியியல் துறையில் விவசாயிகளுக்காக நீண்ட காலமாக நெல் அறுவடைக்குப் பயன்படுத்தப்பட்டு, தற்போது அப்பணிக்குத் திறம்படப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள ஐந்து சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள், வெள்ள நிவாரணப் பணிகளின்போது பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்யவும் ஏதுவாக 2024-25ஆம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றி வடிவமைக்கப்படும்.



**21. ஈரோடு மாவட்டம் தாளவாடி, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் உருளைக்கிழங்கு சாகுபடியினை ஊக்குவிக்குவிப்பதற்காக விவசாயி களுக்கு விதைகள் உள்ளிட்ட இடுபொருட்களுக்கு மானியம் வழங்கிட 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தியை அதிகரித்திட, 2024-25ஆம் ஆண்டில் நீலகிரி, கொடைக்கானல் பகுதிகளில் மட்டுமல்லாது உருளைக்கிழங்கு சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்ப நிலை கொண்ட ஈரோடு மாவட்டம் தாளவாடி, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளிலும் விவசாயிகளுக்கு விதைகள் உள்ளிட்ட இடுபொருட்களுக்கு மானியம் வழங்கப்பட்டு உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவிக்கப்படும். இதற்கென 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**22. உயிர்ம வேளாண்மை மேற்கொள்ளத் தேவையான சான்றுவிதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் அரசு விதைப் பண்ணைகளில் 20 ஏக்கரில் உயிர்ம வேளாண் முறையில் சிறுதானியங்கள், பயறுவகைகளின் விதைகள் உற்பத்தி செய்திட ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் சிறுதானியங்கள், பயறுவகைகளில் உயிர்ம வேளாண் சாகுபடியினை விவசாயிகளிடையே ஊக்கப்படுத்தும் வகையில் 2024-25ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் 20 ஏக்கரில் உயிர்ம வேளாண் முறையில் சிறுதானியங்கள், பயறுவகைகளின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சான்றுநிலை விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.



**23. தமிழ்நாட்டில் ஊட்டச்சத்துகள் நிறைந்த உண்ணக்கூடிய வெள்ளை மொட்டுக் காளான், பால் காளான், சிப்பிக் காளான் போன்ற காளான் வகைகளின் வளர்ப்பானது வேளாண் செயல்பாடாக அறிவிக்கை செய்யப்படும்.**

விவசாயிகள், காளான் வளர்ப்போர் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் கோரிக்கையினைப் பரிசீலனை செய்து, பல்வேறு மத்திய, மாநில வேளாண், வேளாண்சார் அமைப்புகள், உண்ணக்கூடிய காளான் வகைகளைக் காய்கறிகளுடன் ஒப்பிட்டுள்ளதையும், நிலமற்ற விவசாயிகளும் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பதனைக் கருத்தில் கொண்டும் ஊட்டச் சத்துகள் நிறைந்த உண்ணக்கூடிய வெள்ளை மொட்டுக் காளான், பால் காளான், சிப்பிக் காளான் போன்ற காளான் வகைகளின் வளர்ப்பினை தமிழ்நாட்டில் வேளாண் தொழிலாகக் கருதி வேளாண் சாகுபடியின்கீழ் கொண்டுவந்து அறிவிக்கை செய்யப்படும்.



24. **உழவர்களுக்கு பயிர் சாகுபடி காலங்களில் வேளாண் ஆலோசனைகளை உரிய நேரத்தில் உடனிருந்து வழங்கி, அவர்களுக்கு உதவிடும் வகையிலும், வேளாண் கல்வி பயிலும் மாணவர்கள் கிராமப்புர வேளாண்மை சாகுபடி மேலாண்மை அனுபவங்களை நேரில் கற்றிடும் வகையிலும், 5,000 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு செயல்முறை அனுபவம் ஏற்படுத்தப்படும்.**

பாரம்பரிய வேளாண்மைத் தொழில்நுட்பங்களுடன், புதிய தொழில்நுட்பங்கள், ஆலோசனைகள், கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட பயிர் சார்ந்த அனைத்துத் தகவல்களையும் பயிர் சாகுபடி காலத்தில் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் எடுத்துச் சென்று சேர்ப்பதால் பயிர் உற்பத்தித்திறன் அதிகரித்து, கூடுதல் வருவாயால் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும். மேலும், வேளாண் கல்வி பயிலும் மாணவர்கள் கிராமப்புர வேளாண்மை சாகுபடி மேலாண்மை அனுபவங்களை நேரில் கற்றிடும் வாய்ப்பினை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது. உழவரும் வேளாண் மாணவரும் ஒருங்கே பயன்பெறும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நான்காம் ஆண்டு பயிலும் 5,000 வேளாண்மை, தோட்டக்கலை மாணவர்களுக்கு செயல்முறை அனுபவம் ஏற்படுத்தப்படும்.



## 25. உழவர் செயலியில் தனியாருக்குச் சொந்தமான மண் அள்ளும் இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், டிரோன்கள், விசைத்துளைக் கருவிகள் பற்றிய விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.

விவசாய நிலங்களைச் சமன் செய்வதற்கும், முட்புதர்களை அகற்றி தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவதற்கும், கரும்பு அறுவடை செய்வதற்கும், உரக்கலவை, களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி ஆகியவற்றைப் பயிர்களின் மீது நேரடியாகத் தெளிப்பதற்கும், ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கும், விவசாயிகளுக்குக் குறித்த காலத்தில் பணி மேற்கொள்வதற்கு உதவிடும் வகையில் தனியாருக்குச் சொந்தமான மண் அள்ளும் இயந்திரங்கள், கரும்பு அறுவடை செய்யும் இயந்திரங்கள், டிரோன்கள், விசைத்துளைக் கருவிகள் ஆகியவற்றின் உரிமையாளர் பெயர், முகவரி, அலைபேசி எண் போன்ற விவரங்கள் வட்டாரம், மாவட்ட வாரியாக, உழவர் செயலியில் பதிவேற்றம் செய்யப்படும்.



## 26. வேளாண்மைப் பொறியியல் தொடர்பான அரசுத் திட்டங்களின் சிறப்பம்சங்களை விவசாயிகளுக்கு எளிதில் கொண்டு செல்லும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டம், நவீன வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு, இ -வாடகை, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், விவசாயிகளுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட் வழங்குதல், சிறுதானிய இயக்கத்தின் கீழ் தரிசு நில மேம்பாடு போன்ற அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்தும், வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்கள் குறித்தும் விவசாயிகள் எளிதில் அறியும் வகையில் 2024-25ஆம் ஆண்டில், 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.



**27. வேளாண் விளைபொருள் ஏற்றுமதிக்கான வழிமுறைகளை விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் "ஏற்றுமதி ஆலோசனை மையங்கள்" (Export Consultancy Cell) அமைக்கப்படும்.**

வேளாண் விளைபொருட்களுக்கு உலகளாவிய சந்தை வாய்ப்புகள், அவற்றின் தரம், மதிப்புக் கூட்டுதல், ஏற்றுமதி நடைமுறைகள் போன்ற பல்வேறு வழிமுறைகளை விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளவும், வேளாண், வேளாண் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியையும், ஏற்றுமதியாளர் களையும் ஊக்குவிக்கும் வகையிலும், 2024-25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் "ஏற்றுமதி ஆலோசனை மையங்கள்” (Export Consultancy Cell) அமைக்கப்படும்.



**28. வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தில் வங்கிக் கடன் பெற்றுத் தொழில் துவங்க ஆர்வமுள்ள விவசாயிகள், தொழில் முனைவோர்கள் ஆகியோருக்கு இலவசமாகத் திட்ட அறிக்கை தயாரித்து வங்கிக் கடன் பெற வழிவகை செய்யப்படும்.**

வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் பெற்று அறுவடைக்கு பிந்தைய மேலாண்மைக்கான வேளாண் கட்டமைப்புகளை உருவாக்கிடவும், தங்களது தொழிலை விரிவாக்கம் செய்திடவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பது முதல் வங்கிக் கடன் பெறுவது வரையிலான அனைத்து உதவிகளும் மாவட்ட அளவிலான ஆலோசகர்கள் மூலம் ஆர்வமுள்ள விவசாயிகள், தொழில் முனைவோர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.



## 29. வேளாண் விளைபொருட்களின் தரத்தை விவசாயிகள் அறிந்திடும் வகையில் தரம் பிரிப்பு, பகுப்பாய்வுப் பயிற்சிகள் கிராம அளவில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்

வேளாண் விளைபொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு, தர உறுதி அடிப்படையில் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கச் செய்யும் வகையிலும், விளைவித்த விளைபொருட்களின் தரத்தை விவசாயிகள் அறிந்திடும் வகையிலும், தரம் பிரிப்பு, பகுப்பாய்வுப் பயிற்சிகள் கிராம அளவில் அக்மார்க் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்களால், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.





